RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 157 | ஜூன்.12, 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சாதி சங்கங்களுக்கு தடை கோரி வழக்கு தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜூன்.12-

சாதி சங்கஙளுக்கு தடை விதிக்கக் கோரிய மனுவுக்கு, தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





மதுரை மானகிரியைச் சேர்ந்த செல்வகுமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த பொதுநல மனு: தமிழகத்தில் பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான குற்றங்களை தடுக்க மாநில அளவில் முதல்வர், டிஜிபி அடங்கிய குழுவும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் கொண்ட குழுவும் உள்ளன. மாவட்டக் குழு பட்டியல் சமூகத்தினருக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரித்து, மாநில குழுவுக்கு அறிக்கை அளிக்க வேண்டும். இவ்வாறு நடைபெறுவதாக தெரியவில்லை.

தமிழகத்தில் பட்டியல் சமூகத்தினருக்கு எதிராக செயல்கள் அதிகரித்து வருகின்றன. இதனால், தமிழகத்தில் டிஜிபி தலைமையிலான எஸ்.சி., எஸ்.டி. பாதுகாப்புக் குழு முறையாகச் செயல்படுவதையும், பட்டியல் சமூகத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும், சாதி வெறுப்புணர்வை தூண்டும் யூ டியூப் சேனல்களுக்கு தடை விதித்தும், தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யாத, தேர்தல்களில் போட்டியிடாத சாதி கட்சிகள் மற்றும் தமிழகத்தில் கூட்டுறவு சங்க விதிகளை மீறி செயல்படும் அனைத்து சாதி சங்கஙளுக்கும் தடை விதித்தும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரிய கிளாட் அமர்வு விசாரித்து, மனு தொடர்பாக தமிழக ஆதி திராவிட நலத்துறை செயலர், தமிழக டிஜிபி, பதிவுத் துறை தலைவர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

## தமிழகத்தை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்ற ஒன்றிணைவோம்: முதல்வர் ஸ்டாலின்

சென்னை: ஜூன்.12-

“தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்ற ஒன்றிணைந்து செயல்படுவோம்” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 12ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் ஓர் அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பால் (ILO) அங்கீகரிக்கப்பட்ட இந்நாள், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் கடைப்பிடிக்கப்படுகின்றது.




நம் சமுதாயத்தின் எதிர்கால முன்னேற்றம், இன்றைய குழந்தைகளை சார்ந்துள்ளது. அவர்கள் தான் நாளைய நாட்டை வழிநடத்தும் செல்வங்கள். துள்ளித் திரிந்து விளையாடி, பள்ளிக்கு சென்று கல்வி கற்க வேண்டிய இனிய பருவத்தில் அவர்களை குழந்தை தொழிலாளராக பயன்படுத்துவது சட்டத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் முற்றிலும் புறம்பானது. குழந்தைகளின் அறிவை வளர்த்து அவர்களின் திறமைகளை மேம்படுத்தி, நல்ல குடிமக்களாக உருவாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஆனால், ஒரு சில குழந்தைகள் பள்ளிக்குப் போகாமல், தொழிலாளர்களாக மாறும் போது, அவர்கள் கல்வி, விளையாட்டு, சுதந்திரம் மற்றும் அவற்றால் கிடைக்கக்கூடிய நல்ல எதிர்காலம் ஆகியவற்றை இழக்கிறார்கள். ஒரு எதிர்கால சாதனையாளரை இழப்பது என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. எனவே, அத்தகைய சூழலை தடுப்பது மிக அவசியம். கல்வி கற்கும் உரிமையை அனைத்து குழந்தைகளும் பெறுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை முழுமையாக ஒழிக்கவும், அனைத்து குழந்தைகளின் கல்வி கற்றலையும் உறுதி செய்யும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்காக அரசு மாநில செயல் திட்டத்தையும், நிலையான இயக்க நடைமுறைகளையும் உருவாக்கியுள்ளது. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 தமிழ்நாட்டில் மிக கடுமையாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்து உள்ளாட்சி பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், தொழில் நிறுவன உரிமையாளர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, அனைத்து அரசு அலுவலகங்களிலும், அரசு ஊழியர்கள், குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்று, குழந்தைத் தொழிலாளர் இல்லாத சமுதாயத்தை உருவாக்க சீரிய முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

குழந்தைகள் தரமான கல்வி கற்கவும், பெற்றோர்களின் சுமைகளை குறைக்கவும், தமிழ்நாடு அரசு கட்டணமில்லா கல்வி, விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பைகள், சீருடைகள், காலைச் சிற்றுண்டி மற்றும் சத்தான மதிய உணவு, காலணிகள், பேருந்து பயண அட்டைகள், மிதிவண்டிகள் போன்ற பல நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் சீரிய முயற்சிகளுக்கு பொது மக்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பினை நல்கி, குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற விழிப்புணர்வுடன், தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்ற ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று உறுதியேற்போம்.

குழந்தைகளே நம் நாட்டின் செல்வம் !

கல்வியே குழந்தைகளுக்கு நிரந்தர செல்வம் !

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவோம் !

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிடுவோம்!. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பட்டாசு ஆலைகளில் உரிய கட்டுப்பாடுகளை செயல்படுத்த செல்வப்பெருந்தகை வலியுறுத்தல்

சென்னை: ஜூன்.12-

“பட்டாசு தொழிற்சாலைகளில் உரிய கட்டுப்பாடுகளை செயல்படுத்தாத காரணத்தால் தான் இத்தகைய விபத்துக்கள் ஏற்படுகின்றன. தொழிற்சாலை ஒழுங்குமுறை நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. இதுபோன்ற அலட்சியப் போக்கு குறித்து மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை நடத்த வேண்டும்” என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.



விருதுநகர் தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அருகே தனியார் பட்டாசு ஆலையில் இன்று ஏற்பட்ட வெடி விபத்தில் பெண்கள் உட்பட 3 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ள செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறேன். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தகைய வெடிவிபத்து சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதும், அப்பாவித் தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழப்பதும் தொடர்கதையாக நடந்து வருகிறது. இதனை தடுக்கின்ற வகையில் பட்டாசு தொழிற்சாலைகளில் உரிய கட்டுப்பாடுகளை செயல்படுத்தாத காரணத்தால் தான் இத்தகைய விபத்துக்கள் ஏற்படுகின்றன.

தொழிற்சாலை ஒழுங்குமுறை நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. இதுபோன்ற அலட்சியப் போக்கு குறித்து மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை நடத்த வேண்டும். விபத்துகள் ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து, பாதுகாப்பான முறையில் பட்டாசு தொழில் தொடர்ந்து நடைபெற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பட்டாசு ஆலை விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீட்டு தொகை வழங்குவதோடு, காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணமும் சிறந்த முறையில் சிகிச்சையும் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய விரும்புகிறேன். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## ‘தமிழகத்தில் இபிஎஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும்’ : நயினார் நாகேந்திரன்

திருநெல்வேலி: ஜூன்.12-

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று இபிஎஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும் என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



திருநெல்வேலியில் மாவட்ட பாஜக அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது : எங்கள் கூட்டணிக்கு பல்வேறு கட்சிகளும் வரும் வாய்ப்புகள் உள்ளன. அதற்கான பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் நாட்கள் இருப்பதால் அது குறித்து பின்னர் தெரியவரும். தமிழகத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் பாஜக கூட்டணி வெற்றி பெற்று இபிஎஸ் தலைமையில் கூட்டணி கட்சி ஆட்சி அமையும்.

மக்கள் வாக்களித்த பின்னர்தான் எது வலிமையான கூட்டணி என்பது தெரியவரும். தாங்கள் தான் வலிமையான கட்சி என்று கூறிக் கொள்ளும் திமுக தேர்தலில் தனித்து நிற்க தயாரா. திமுக கூட்டணிக்குள் சலசலப்பு குறித்து போக போக தெரியும்.

மதுரையில் நடைபெற உள்ள முருக பக்தர்கள் மாநாட்டுக்கு 4 லட்சத்துக்கும் அதிகமானோர் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இந்த மாநாட்டுக்கு ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து நெருக்கடி கொடுக்கப்படுகிறது. இந்த மாநாடு பாஜகவுக்கு ஆதரவாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இந்த மாநாட்டில் எல்லோரும் கலந்து கொள்ளலாம். திமுக, அதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் உள்ள முருக பக்தர்களும் கலந்து கொள்வார்கள். மதவாதம் இருக்கக் கூடாது. மதத்தை நம்பி யாரும் ஆட்சிக்கு வர முடியாது. இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்துக்கள். இந்து என்பது ஒரு பண்பாடு , ஒரு வழிமுறை . இந்து என்பது மதம் இல்லை. ஒரு மதத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆட்சிக்கு வருபவர்கள் யார் என்பது மக்களுக்கு தெரியும்.

கீழடி விவகாரத்தில் உண்மை நிலையை நேரில் சென்று கண்டறிந்து மத்திய அரசிடம் வலியுறுத்துவேன். நாட்டின் பெருமையை உலக அளவில் உயர்த்தி பாதுகாப்புக்கு மிகப்பெரிய உறுதியை பிரதமர் மோடி தந்துள்ளார். கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்துக்கு மட்டும் ரூ 10 லட்சம் கோடி நிதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ளவர்கள் உண்மையை மறைத்து பேசுகிறார்கள்.

தமிழ் மொழிக்கு மோடி அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. திருக்குறளை 63 மொழிகளில் மொழிபெயர்த்து உலகம் முழுமைக்கு கொண்டு சேர்த்துள்ளார் மோடி. காசியிலும், குஜராத்திலும் தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்துக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம்

சென்னை: ஜூன்.12-

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் ஸ்டாலின், உயிரிழந்த இருவரின் குடும்பத்துக்கும் தலா ரூ.4 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், வடகரை கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று (ஜூன் 11) காலை சுமார் 9 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் காரியாட்டி வட்டம், கல்குறிச்சியை சேர்ந்த சவுண்டம்மாள் (54) மற்றும் தண்டியனேந்தலைச் சேர்ந்த கருப்பையா (37) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனையில் சிகிச்சை பெற்றுவரும் காரியாபட்டியைச் சேர்ந்த கணேசன் (55), முருகன் (40), மாரியம்மாள் (40) மற்றும் பேச்சியம்மாள் (38) ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநிலங்களவை தேர்தல் வேட்புமனுக்கள் பரிசீலனை: கமல்ஹாசன் உள்ளிட்ட 6 பேர் போட்டியின்றி தேர்வு

சென்னை: ஜூன்.12-

நாடாளுமன்ற மாநிலங்களவைக்கு திமுக சார்பில் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், பி.வில்சன் உள்ளிட்ட 4 பேரும், அதிமுக சார்பில் ஐ.எஸ்.இன்பதுரை, தனபால் ஆகியோரும் போட்டியின்றித் தேர்வாகியுள்ளனர்.

தமிழகத்தில் மாநிலங்களவை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை நேற்று நடைபெற்ற நிலையில், அதிமுகவினரின் மனுக்களுக்கு எதிரான வா.புகழேந்தியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. மேலும், 7 சுயேச்சை வேட்பாளர்களின் மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பி.க்களாக இருந்த வைகோ, பி.வில்சன், சண்முகம், முகமது அப்துல்லா, அன்புமணி மற்றும் சந்திரசேகரன் ஆகிய 6 பேரின் பதவிக்காலம் வரும் ஜூலை 24ம் தேதியுடன் முடிகிறது. தொடர்ந்து, அந்த 6 இடங்களுக்கான தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தமிழக சட்டப்பேரவையில் எம்எல்ஏக்கள் எண்ணிக்கை அடிப்படையில் 6 இடங்களில் 4 திமுகவுக்கும், இரண்டு அதிமுகவுக்கும் கிடைக்கும். அதனடிப்படையில், திமுக சார்பில் 4 இடங்களுக்கு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், பி.வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோரும், அதிமுக சார்பில், தனபால் மற்றும் ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோரும் அறிவிக்கப்பட்டனர்.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 2ம் தேதி தொடங்கி 9ம் தேதி வரை நடைபெற்றது. திமுக, அதிமுக வேட்பாளர்கள் மற்றும் பத்மராஜன் உட்பட 7 சுயேச்சைகளும் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.

வேட்பு மனுக்கள் பரிசீலனை நேற்று சட்டப்பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதில், எம்எல்ஏக்கள் முன்மொழிவு இல்லாத காரணத்தால் சுயேச்சைகளின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. திமுக சார்பில் போட்டியிட்ட கமல்ஹாசன், பி.வில்சன், கவிஞர் சல்மா மற்றும் சிவலிங்கம் ஆகியோரது மனுக்கள் ஏற்கப்பட்டன.

இரட்டை இலை தொடர்பான வழக்கு தேர்தல் ஆணையத்தில் நிலுவையில் உள்ள நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் என பழனிசாமி வேட்புமனு தாக்கல் படிவங்களில் கையெழுத்திட்டிருப்பதால், அதிமுகவினரின் மனுக்களை நிராகரிக்க வேண்டும் என்று அதிமுக ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த வா.புகழேந்தி கோரிக்கை விடுத்திருந்தார். இருப்பினும், அதிமுக வேட்பாளர்கள் இருவரின் மனுக்களும் ஏற்கப்பட்டன.

இதையடுத்து, திமுக வேட்பாளர்களான பி.வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர். சிவலிங்கம் மற்றும் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், அதிமுக வேட்பாளர்கள் ஐ.எஸ்.இன்பதுரை, தனபால் ஆகிய 6 பேரும் மாநிலங்களவை உறுப்பினர்களாக போட்டியின்றித் தேர்வாகினர். வேட்புமனுக்களை இன்று (ஜூன் 12) மாலை 3 மணி வரை திரும்பப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதன் பின்னர் மாநிலங்களவைக்குப் போட்டியின்றி தேர்வாகியுள்ள திமுக, அதிமுகவைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று சிறப்பித்து

# 703 மகளிர் சுயஉதவிக்குழுக்கள், கூட்டமைப்புக்களைச் சார்ந்த 843 உறுப்பினர்களுக்கு ரூ.72.24 கோடி மதிப்பீட்டிலான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார்

சிவகங்கை, ஜூன்.12-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக நடத்தப்பட்ட, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பிற்கான ஆணைகள் வழங்கும் விழாவினை தொடர்ந்து, சிவகங்கை பகுதிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பங்கேற்று சிறப்பித்து, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் கடனுதவிக்கான ஆணைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் வழங்கி தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் இந்திய துணை கண்டத்தில் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்கின்ற வகையில், எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாக கொண்டுள்ளதால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் தமிழகத்தினை பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக திகழ்கின்ற வகையில், தொலை நோக்கு சிந்தனை யுடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதில் குறிப்பாக, ஆணுக்க பெண் சமம் என்ற நிலையை அனைத்திலும் ஏற்படுத்திடும் பொருட்டும், பெண்கள் பிறரை சார்ந்திராமல் தற்சார்ப்பு நிலையை அடைந்திடும் பொருட்டு, பெண்களின் முன்னேற்றத்திற்கென கலைஞரின் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம் போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு 1989ஆம் ஆண்டு, தர்மபுரி மாவட்டத்தில்




பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) உதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்க தொடங்கியது.

அவ்வாறாக, மகளிரின் முன்னேற்றத்திற்காக முத்த மிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தொலை நோக்கு பார்வையில், துவங்கப்பட்ட இத்திட்டமானது, வெற்றி கரமாக செயல் படுத்தப்பட்டு, தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் துவங்க வங்கி கடன் இணைப்புகளை ஏற்படுத்தி சுய உதவிக்குழு இயக்கத்தையும் வலுப்படுத்தி வருகிறது.

அதுமட்டுமன்றி, தற்போது நலிவுற்றோரை ஒருங்கிணைத்து சிறப்புக் குழுக்களும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, சுய உதவிக்குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மாநில நகர்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய மூன்று முக்கியத் திட்டங்களை மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகள், நகர்புற பகுதிகள் மற்றும் குறிப்பிட்ட வட்டாரங்களில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் உழைப்பு மட்டுமன்றி, நாணயத்திலும் நற்சான்று பெற்றவர்களாக திகழ்ந்து வருகிறீர்கள். தங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கென மகளிர் திட்டத்தின் வாயிலாக பல்வேறு வகையான கடனுதவிகளை இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, மாண்புமிக தமிழ்நாடு துணை முதலமைச்சர் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் கடனுதவிகளை வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் ஊரகம் மற்றும் நகர்புற பகுதிகளைச் சார்ந்த 703 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.67.54 கோடி மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பிற்கான ஆணைகளையும், 7 பகுதி கூட்டமைப்புகளுக்கு ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் பெருங்கடனுதவிக்கான ஆணைகளையும், 19 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.0.24 கோடி மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதிக்கான ஆணைகளையும், ரூ.0.14 கோடி மதிப்பீட்டில் 30 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு வட்டார வணிக வள மைய கடனுதவிக்கான ஆணைகளையும், 8 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.0.23 கோடி மதிப்பீட்டில் தனிநபர் தொழில் முனைவோர் கடனுதவிக்கான ஆணைகளையும்,

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 76 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.0.63 கோடி மதிப்பீட்டிலான NEFT கடனுதவிக்கான ஆணைகளையும் என மொத்தம் 703 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப் புக்களைச் சார்ந்த மொத்தம் 843 உறுப்பினர் களுக்கு ரூ.72.24 கோடி மதிப்பீட்டிலான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் பல்வேறு வகையான கடனுதவிகளுக்கான ஆணைகள் இவ்விழாவின் மூலம் வழங்கப்படுகிறது.

அதில், குறிப்பாக கூட்டுறவுத்துறையின் வாயிலாக மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக 191 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு ரூ.19.25 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகள் வழங்கப்படுவது குறிப்பிடதக்கதாகும்.

இதுபோன்று அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்று தங்களின் வாழ்வாதாரத்தினை மேம்பாட்டிற்கு அடிப்படையாக இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, மகளிர் சுய உதவிக்குழுக்களின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட இயக்குநர் என்.கவிதப்பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் உமா மகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன் குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மாவட்ட செயல் அலுவலர் (வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) ஆதித்யா மேனன் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் மரியா, சின்னதுரை, தேன்ராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வடலிவிளையில் ரூபாய் 133.39 கோடியில் முடிவுற்ற பாதாள சாக்கடை திட்டத்தை தொடங்கிவைத்ததைத்தொடர்ந்து

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா பார்வையிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்

கன்னியாகுமரி, ஜூன்.12-

கன்னியாகுமரி மாவட்ட நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடலிவிளையில் ரூ.133.39 கோடியில் முடிவுற்ற பாதாள சாக்கடை திட்டத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று (11.06.2025) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, குத்துவிளக்கேற்றி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, பேசுகையில்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும் பொருட்டு திட்ட மதிப்பீடு ரூ.76.05 கோடிக்கு திட்டம் செயல் படுத்தவும், பராமரிப்புக்கென ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.90 கோடி எனவும் மதிப்பிடப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அனுமதி தலைமை பொறியாளர்




(த.கு,வ,வாரியம்) அவர்களால் ரூ.8.35 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணி ஆணை ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கழிவுநீர் அகற்றல் கோட்டம், நாகர்கோவில் மூலம் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ரூ.133.39 கோடி திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாகர்கோவில் மாநகராட்சி 52 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. தற்போது முதல் கட்டமாக 35 வார்டுகளில் (18 வார்டுகளுக்கு முழுமையாகவும் 17 வார்டுகளுக்கு பகுதியாகவும்) பாதாளச்சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1,81,399 மக்கள் பயன்பெறுகிறார்கள்.

இத்திட்டத்தின்படி பகுதி - I மற்றும் பகுதி - II களில் 115659 மீ நீளத்திற்கு கழிவு நீர் குழாய்கள் மற்றும் 5028 எண்ணிக்கை இயந்திர குழிகள் மற்றும் 2 மேற்செலுத்தும் இயந்திர குழிகள் அமைக்கப்பட்டு கழிவு நீரேற்று நிலையத்தில் சேகரிக்கப்படுகிறது. பாறைக்கால்மடத்தில் உள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் இருந்து 750 மி.மீ. விட்டமுடைய இரும்பு குழாய்கள் மூலம் 2160 மீ நீளத்திற்கு வலம்புரிவிளையில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கழிவு நீர் எடுத்து செல்லப்படுகிறது. இக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 17.66 எம்.எல்.டி. கொள்ளளவு சுத்திகரிக்கும் அளவிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 15310 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 5,450 மீ. தொலைவில் உள்ள தெங்கம்புதுர் கால்வாய் பாசனத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்டு தெங்கம்புதூர் கால்வாயில் விடபடுகிறது. நீண்ட நாட்களாக நடைபெற்ற இத்திட்டத்தினை நடைமுறைக்கு கொண்டுவந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில உணவு ஆணைய தலைவர் என்.சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக செயற்பொறியாளர் பொறி.ராஜன், உதவி செயற்பொறியாளர்கள் கங்காதரன் (கூ.பொ), ராஜேஷ் குமார், மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சி லதா, மண்டல தலைவர் செல்வகுமார், மாநகராட்சி நிர்வாக பொறியாளர் பொறி.ரகு ராமன், மாநகராட்சி உறுப்பினர்கள் அனிலா சுகுமார், ஜெய விக்ரமன், ஸ்டாலின் பிரகாஷ், ரமேஷ், பால் அகியா, ரோசிட்டா திருமால், மாநகராட்சி இளநிலை பொறியாளர் தேவிகண்ணன், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் அரசு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சியை பெற்றுத்தந்த ஆசிரியர்களை மேலநெட்டூர் கிராமப்பொது மக்கள் பொன்னாடை போர்த்தி, கேடயம் வழங்கி பாராட்டு தெரிவித்தனர்

# பெண்ணாடம் அருகே 25,000 நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதம்

**கடலூர், ஜூன்.12–**

கடலூர் மாவட்டம் பெண்ணாடம் அருகே 5,000 விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட 25,000 நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைந்துள்ளது. கடலூர் மாவட்டம் பெண்ணாடம் அருகே ஆதமங்களம், மேலூர், சத்தநத்தம், தொளார் உள்ளிட்ட கிராமங்களில் 4 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் உள்ளது. இங்கு சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் தங்கள் பயிர் செய்த நெல்லை அறுவடை செய்து இந்த நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வது வழக்கம்.



இந்த நிலையில் கடந்த 3 நாட்களாக இப்பகுதிகளில் மாலை, இரவு நேரங்களில் மழை விட்டுவிட்டு பெய்வதால் 25,000 நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைந்துள்ளது. அதேபோல் கொள்முதல் செய்யப்பட்ட 4 கொள் முதல் நிலையங்களில் உள்ள 25,000 நெல் மூட்டைகள் லாரி பற்றாக்குறையால் குடோனுக்கு எடுத்து செல்லப்படாமல் ஆங்காங்கே திறந்த வெளியில் இருப்பதால் அந்த நெல்மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைந்தது.

மேலும் இந்த பகுதியில் தொடர்ந்து மழைபெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ள நிலையில் விரைவாக விவசாயிகளிடம் இருந்து நெல்கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.


# சுய உதவிக் குழு தினத்தை முன்னிட்டு 851 மகளிர் குழுக்களுக்கு ரூ.60.44 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் வழங்கினார்

தேனி, ஜூன்.12-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம் சார்பில் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வங்கி கடனுதவிகள் வழங்கும் நிகழ்வை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 851 மகளிர் குழுக்களுக்கு ரூ.60.44 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் பெரியகுளம்) முன்னிலையில் வழங்கினார்கள்.

ஒரு நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு பெண்களின் பங்கு மிக முக்கியமானதாகும். இந்த பங்கினை மேலும் உயர்த்துவதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு



நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மகளிரின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சுய உதவிக் குழு தொடங்கி வைக்கப்பட்டது. மகளிர் சுய உதவிக்குழுக்கள் பொருளாதார ரீதியாக பெண்கள் முன்னேறுவதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும், சமூக நீதியை மேம்படுத்துவதற்கும் முக்கிய பங்காற்றுகிறது.

கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் சுய உதவிக்குழு தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று கடந்த 2023 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டது.

அந்த வகையில் மகளிர் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு இன்றைய தினம், ஊரக சுய உதவிக்குழுக்களுக்கான வங்கி கடன் (SHG–BLP) திட்டத்தின் கீழ் 324 குழுக்களுக்கு ரூ. 35.95 கோடி கடனுதவியும், நகர்ப்புறம் - சுய வேலை வாய்ப்புத் திட்டம் - சுய உதவிக்குழுக்களுக்கான வங்கி கடன் (SEP-BL) திட்டத்தின் கீழ் 267 குழுக்களுக்கு ரூ. 23.09 கோடி கடனுதவியும், சமுதாய முதலீட்டு நிதிக்கடன் திட்டத்தின் கீழ் (CIF) 150 குழுக்களுக்கு ரூ. 0.75 கோடி கடனுதவியும், வட்டார வணிக வள மைய கடன் (BBRC Loan) திட்டத்தின் கீழ் 38 குழுக்களுக்கு ரூ.0.25 கோடி கடனுதவியும், தனிநபர் பொருளாதார கடன் (Enterprise Loan) திட்டத்தின் கீழ் 14 குழுக்களுக்கு ரூ. 0.24 கோடி கடனுதவியும், வறுமை குறைப்பு நிதி (VRF) திட்டத்தின் கீழ் 50 குழுக்களுக்கு ரூ. 0.12 கோடி கடனுதவியும், வாழ்ந்து காட்டுவோம் நுண் நிறுவனக்கடன் திட்டத்தின் (NEFF) கீழ் 8 குழுக்களுக்கு ரூ.0.04 கோடி கடனுதவியும் என மொத்தம் 851 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.60.44 கோடி வங்கி கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

முன்னதாக, மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டார்கள்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு விருது மற்றும் வங்கி கடன் உதவிகள் வழங்கியதைத்தொடர்ந்து

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா 686 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.75.66 கோடி வங்கி கடன் உதவிகள் வழங்கி தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்தார்

கன்னியாகுமரி, ஜூன்.12-

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில் மகளிர் சுய உதவி குழுவினருக்கு கடனுதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்து கொண்டு, மகளிர் சுய உதவி குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்க ஆணை பிறப்பித்த தமிழ் நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்தக்கூடிய அனைத்து திட்டங்களையும், அனைத்து தரப்பட்ட மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தான் மாவட்ட நிர்வாகம் செயல்படுகிறது. குறிப்பாக ஒவ்வொரு வருடத்திலும் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கான வங்கிக் கடன்கள் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் கல்வி கடன் மற்றும் வேளாண் கடன்களை விட அதிக அளவிலான கடன்கள் மகளிர் முன்னேற்றத்திற்காக மகளிர் சுய உதவி குழுக்க ளுக்கு வழங்கப்படுகிறது.

மகளிர் சுய உதவி குழுக்கள் மதி மற்றும் நான் மதி என இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் மதி குழுவில் ஊரக பகுதிகளில் 60,000 மகளிர்கள் இணைந்து 4677 குழுக்கள் உள்ளன. அதேபோன்று நகர்ப்புற பகுதிகளில் 6346 குழுக்களில் 76092 மகளிர் என மொத்தம் சுமார் 1,36,092 மகளிர்கள் மதி குழுவிலும், நான் மதி குழுவில் சுமார் 72,000 மகளிர்களும் உள்ளனர்.




கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட 80 மகளிர் உதவி குழுக்களுக்கு ரூ.7.53 கோடி கடன் உதவிகளும், தோவாளை வட்டாரத்திற்குட்பட்ட 51 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.6.81 கோடி கடன் உதவிகளும், இராஜாக்கமங்கலம் வட்டத்திற்குட்பட்ட 110 மகளிர் சுய உதவி குழுவினருக்கு ரூ.9.97 கோடி கடன் உதவிகளும், குருந்தன்கோடு வட்டத்திற்குட்பட்ட 90 மகளிர் சுய உதவி குழுவிற்கு ரூ.9.90 கோடி கடன் உதவிகளும், தக்கலை வட்டத்திற்குட்பட்ட 70 மகளிர் சுய உதவி குழுவிற்கு ரூ.9.08 கோடி கடன் கோடி கடன் உதவிகளும், திருவட்டார் வட்டத்திற்குட்பட்ட 61 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.7.32 கோடி கடன் உதவிகளும், கிள்ளியூர் வட்டத்திற்குட்பட்ட 61 மகளிர் சுய உதவி குழுவிற்கு ரூ.8.62 கோடி கடன் உதவிகளும், முன்சிறை வட்டத்திற்குட்பட்ட 42 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.5.93 கோடி கடன் உதவிகளும், மேல்புறம் வட்டத்திற்குட்பட்ட 83 மகளிர் சுய உதவி குழுவினருக்கு ரூ.10.51 கோடி கடன் உதவிகள் என மொத்தம் 648 மகளிர் சுய உதவி குழுவினருக்கு பெருங்கடன், வங்கி நேரடி கடன், சுயஉதவிக்குழு தொழில் முனைவோர் கடன், வட்டார வணிக வள மைய கடன் என மொத்தம் ரூ.75.66 கோடி கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவி குழுவினருக்கு வழங்கப்படும் கடன்களின் வட்டி விகிதம் குறைவாகவும், செலுத்த வேண்டிய காலம் அதிகமாகவும் உள்ளதால் மகளிருக்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். 10 மகளிர் சேர்ந்து ஒரு சுய உதவி குழுவை ஆரம்பிக்கும் போது அரசின் நலத்திட்ட உதவிகள் உங்களுக்கு எளிதில் கிடைக்கும். மகளிர் சுய உதவி குழுவினர் தாங்கள் வாங்கும் கடன்களில் ஒவ்வொரு குழுவும் தங்களுக்கு என்று ஒரு தொழிலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அந்தத் தொழிலை மேற்கொண்டு அதில் வருமானம் ஈட்டி தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைய தினம் வங்கி கடன் பெறும் அனைத்து மகளிர் சுய உதவி குழு உறுப்பினருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்திட்டத்தினை அறிவித்து செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, பேசினார்கள்.

முன்னதாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சுய உதவி குழுவினர்களுக்கு விருது மற்றும் வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்டம் இறச்சகுளம் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புக்கு மணிமேகலை விருதினை வழங்கினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில உணவு ஆணைய தலைவர் என். சுரேஷ் ராஜன், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜி.பிரின்ஸ். நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், மகளிர் திட்ட இயக்குனர் பத்ஹூ முகமது நசீர், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சி லதா, முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், மண்டல தலைவர் செல்வகுமார், வங்கி மேலாளர் பழனிசங்கர், உதவி திட்ட இயக்குனர்கள் பாலசுந்தரம், ராமர், மகளிர் சுய உதவி குழுவினர், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# மதுரை கூடலழகர் கோயிலில் வைகாசி திருவிழா தேரோட்டம் கோலாகலம்

**மதுரை, ஜூன்.12–**

மதுரை கூடலழகர் கோயிலில் செவ்வாய்க் கிழமை வைகாசி திருவிழா தேரோட்டம் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள் தனித்தனியாக வடம்பிடித்தனர்.

மதுரை கூடலழகர் கோயிலில் வைகாசி பெருந்திருவிழா ஜூன் 2ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் காலை, மாலையில் சுவாமி புறப்பாடு நடந்தது. இதில் பல்வேறு வாகனங்களில் வியூக சுந்தரராஜபெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியருடன் எழுந்தருளினார். அதனைத் தொடர்ந்து 9ம் நாளான இன்று (ஜூன் 10) தேரோட்டத்தை முன்னிட்டு அதிகாலை 5.30 மணியளவில் வியூக சுந்தரரராஜ பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியருடன் தேரில் எழுந்தருளினார். தொடர்ந்து காலை 6.15 மணியளவில் பக்தர்கள் தேரின் வடங்களை பிடித்து இழுக்கத் தேரோட்டம் தொடங்கியது.

பக்தர்களின் கோவிந்தா, கோவிந்தா கோஷங்கள் முழங்க தேரை வடம் பிடித்து இழுத்தனர். இதில் ஆண்கள், பெண்கள் தனித்தனியாக வடம்பிடித்து இழுத்தனர். பாண்டிய வேளாளர் தெரு, தெற்கு மாரட் வீதி, திருப்பரங்குன்றம் சாலை, நேதாஜி ரோடு, மேலமாசி வீதி வழியாக வலம் வந்து காலை 8.30 மணிக்கு நிலையை அடைந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். இரவில் தங்கச்சிவிகையில் புறப்பாடாகினர். நாளை (ஜூன் 11) மாலை எடுப்புச் சப்பரம், சப்தாவர்ணத்தில் எழுந்தருள்கின்றனர்.

நாளை மறுநாள் (ஜூன் 12) காலை 10.15 மணியளவில் ராமராயர் மண்டபத்திலிருந்து குதிரை வாகனத்தில் புறப்படுகிறார். பனகல் சாலை வழியாக தெற்காவணி மூல வீதியிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி சத்திரத்தில் எழுந்தருள்கிறார். மாலை 4 மணியளவில் திருமஞ்சனமாகி குதிரை வாகனத்தில் கோயிலுக்கு புறப்படுகிறார். 14ம் தேதி விடையாற்றி உற்சவம் நடைபெறும். அடுத்த நாள் 15ம் தேதி உற்சவ சாந்தி அலங்காரத் திருமஞ்சனத்துடன் திருவிழா நிறைவுபெறும். விழா ஏற்பாடுகளை கோயில் தக்கார் ந.யக்ஞ நாராயணன், உதவி ஆணையர் பிரதீபா தலைமையில் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ”பல் மருத்துவ பரிசோதனை சிறப்பு முகாம்” மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

மதுரை, ஜூன்.12-

மதுரை மாநகராட்சி மற்றும் சி.எஸ்.ஐ. பல் மருத்துவ கல்லூரி இணைந்து ஈ.வெ.ரா. நாகம்மையார் பெண்கள் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பல் மருத்துவ பரிசோதனை சிறப்பு முகாமினை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வை யிட்டார்கள்.

மேயர், ஆணையாளர் ஆகியோர் வழிகாட்டுதலின் கீழ் மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ. மாணவிகள் புத்தாக்கம் பெறுவதற்கு மாநகராட்சியின் சார்பில் விளையாட்டு போட்டிகள், மாவட்ட அளவில் மற்றும் மாநில நடைபெறும் பல்வேறு குறு விளையாட்டு போட்டிகள், உயர்கல்வி வழிகாட்டுதல், மேஜிக் ஷோ மற்றும் பசுமை நடைபயணம் உள்ளிட்ட பல்வேறு புத்தாக்க பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.



மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் உடல் நலனை காக்கும் பொருட்டு மதுரை மாநகராட்சி மற்றும் சி.எஸ்.ஐ. பல் மருத்துவ கல்லூரி இணைந்து மாணவ, மாணவிகளுக்கு பள்ளிகளில் வாய்வழி சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ”புன்னகையின் பாதை” திட்டம் ஆகும். இத்திட்டத்தில் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் சுமார் 18000 மாணவ, மாணவியர்களுக்கு இலவச வாய்வழி பல் மருத்துவ பரிசோதனை சிறப்பு முகாம் 11.06.2025 முதல் 23.12.2025 வரை ஆறு மாத காலத்திற்கு வாரத்தின் இரண்டு நாட்கள் மட்டும் பள்ளியில் பரிசோதனை மேற்கொள்வதற்கு மாநகராட்சியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய தினம் ஈ.வெ.ராநாகம்மையார் பெண்கள் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு பல் பரிசோதனை சிறப்பு முகாமினை மேயர் தொடங்கி வைக்கப்பட்டு மாணவியர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் நோய்களுக்கான வாய்வழி பரிசோதனை ஆரோக்கியமான புன்னகை மற்றும் மகிழ்ச்சியான புன்னகை மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைகான வாய்வழி சுகாதாரக் கல்வி ஆகியவை மாணவ, மாணவிகளுக்கு கற்பிக்கப்படும். இம்முகாமில் மாணவ, மாணவியர்களுக்கு பரிசோதனை செய்து கண்டறிந்து மேல்சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படும். மேலும் இம்முகாமில் பல் மருத்துவ சிகிச்சை தொடர்பான மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட குறும்படம் திரையிடப்படுகிறது.

தொடர்ந்து மாநகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் என மொத்தம் 49 பள்ளிகளில் கால அட்டவணைபடி மாணவ, மாணவியர்களுக்கான பல் மருத்துவ பரிசோதனை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் பாண்டிச்செல்வி, கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், துணை ஆணையாளர் ஜெய்னுலாபுதீன். கல்வி அலுவலர் ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், மாமன்ற உறுப்பினர் நூர்ஜஹான், சி.எஸ்.ஐ. பல் மருத்துவ கல்லூரி முதல்வர் மருத்துவர். கே.தன்வீர், சமூக நல பல் மருத்துவ பிரிவு துறைத் தலைவர் மரு.திவ்யா, உதவி விரிவுரையாளர் மரு.லாவண்யா ராகவி, மற்றும் பயிற்சி மருத்துவர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.


# அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சுதந்திரப் போராட்ட வீரர் “வாளுக்கு வேலி அம்பலம்”அவர்களின் பிறந்த நாள் அரசு விழாவில், அன்னாரது திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்

சிவகங்கை, ஜூன்.12-

சுதந்திரப் போராட்ட வீரர் “வாளுக்கு வேலி அம்பலம்” அவர்களின் பிறந்த நாள் அரசு விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் இன்று (10.06.2025) சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் “வாளுக்கு வேலி அம்பலம்” அவர்களின் திருவுருவச்சிலைக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி தெரிவிக்கையில்,

நாம் இன்றையதினம் சுதந்திர காற்றை சுவாசிப்பதற்கு காரணமாக உள்ள சுதந்திரப் போராட்டத் தியாகிகளை போற்றிடும் வகையிலும், அவர்களை கௌரவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், 200 ஆண்டுகளுக்கு முன்னதாக, நடந்துள்ள உண்மைச் சம்பவத்தை வெளிக்கொணருகின்ற வகையில், சுதந்திரப் போராட்டத்தில் தனது பங்களிப்பையும், தியாகத்தையும் முழுமையாக அளித்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம் பலம் அவர்களின் புகழை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையிலும், அதற்கு மெருக்கூட்டும் பொருட்டும், முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள், தன் பொன்மொழிகளால் வரலாற்று சிறப்புக்களை நூல்களாக பொறித்துள்ளார்கள்.



அன்றைக்கு முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களால் விதைத்த விதையின் பயனாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழிற்கு வலுச்சேர்க்கின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டார்கள்.

அதன்படி, மூன்றாம் ஆண்டு அரசு விழா இன்றையதினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கான பெரும் முயற்சியில், நான் ஈடுபட்டதற்கான முழுப்பயனையும் அடைந்தமைக்கு, மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இதற்கான சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், செய்தித்துறை அமைச்சர் அவர்களுக்கும், சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, சுதந்திரப் போராட்ட வீரர் ”வாளுக்கு வேலி அம்பலம்” அவர்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை நகரம்பட்டியில் அமைக்கப்பட்டு, கடந்த 22.01.2025 அன்று சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் காணொலி வாயிலாக, திறந்து வைக்கப்பட்டது சிறப்பிற்குரிய ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் இதேபோன்று அன்னார் அவர்களின் பிறந்த நாள் அரசு விழா, இன்னும் சிறப்பாக கொண்டாடப் படவுள்ளது. சிலை அமைத்தது மட்டுமன்றி, இன்னும் தேவையான கூடுதல் வசதிகளும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

வரலாற்று சிறப்புமிக்க நமது சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திர போராட்ட வீரர்களான வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபம் மற்றும் மருது சகோதரர்கள் அவர்களின் நினைவு மண்டபம், வீரத்தாய் குயிலி அவர்களின் திருவுருவச்சிலை அதனை தொடர்ந்து, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலை ஆகியவைகள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்.

மொழி, இனம், சுதந்திரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்கென பாடுபட்டவர்களை கௌரவிக்கின்ற வகையிலும், அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், அவர்களுக்கு நினைவகங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் திருவுருவச்சிலைகள் ஆகியவைகளை அமைத்து, எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொள்கின்ற வகையில், சிறப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் மேற்கொண்டு, தலைசிறந்த முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருகிறார்கள் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.இந்நிகழ்ச்சியில், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், இ.கா.ப., அவர்கள், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், சிவகங்கை வட்டாட்சியர் சிவராமன், வழக்கறிஞர் சிவ.கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அரசு நிலத்தில் தனி நபர்களின் ஆக்கிரமிப்பு... அகற்ற முடியாமல் அதிகாரிகள் திணறல்? மாவட்ட ஆட்சியர் மனது வைப்பாரா?

தென்காசி, மே.12-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே மங்களபுரம் கிராமத்தில் அரசு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து தெரு மற்றும் ஓடை ஆகிய ஆக்கிரமிப்பு பகுதிகளை செய்த தனி நபர்களிடமிருந்து அரசு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முடியாமல் அரசு அதிகாரிகள் திணறி வருகின்றனர் உள்ளூர் விஏஓ முதல் முதலமைச்சர் மனுக்கள் பிரிவு வரை மனு கொடுத்தும் எதுவும் நடக்கவில்லை என்ற விரக்தியில் பொதுமக்கள் புலம்பி வருகின்றனர் இது பற்றி விவரமாவது கடையநல்லூர் வட்டம் கம்பநேரி புதுக்குடி பகுதி 2.கிராமத்தில் உள்ளது மங்களபுரம் கிராமம் கொல்லம் மதுரை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள படையாட்சி காலனி ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மூலம் பிற்பட்டோருக்கு காலனி வீடு வழங்கியதில் மீதமுள்ள இடம் பிற்கால பயன்பாடு பூங்கா விளையாட்டு மைதானம் தெரு மற்றும் ஓடை கடை மனைகள் உள்ளது மேற்கண்ட பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றனர் இந்த இடத்தை சில தனி நபர்கள் (வார்டு உறுப்பினர் உட்பட) தங்கள் அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு சுமார் 50 லட்ச ரூபாய் மதிப் புள்ள 9 சென்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் ஆக்கிர மிப்பு செய்துள்ள பகுதியில் பொதுமக்கள் யாரும் சென்று வர முடியாத அளவிற்கு முள்வேலி அமைத்தும் தென்னங்கன்றுகளை நட்டும் உள்ளார்கள் மேற்படி நிலத்திற்கு ஆக்கிரமிப்புதாரர்கள் பேரில் பட்டா எதுவும் கிடையாது 40 அடி அகலம் உள்ள நீரோ டையை மறித்தும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பஞ் சாயத்து அலுவலகத்தின் மூலம் போடப்பட்டுள்ள அடிபம்பையும் தாண்டி சுவர் கட்டப்பட்டு அந்த இடத்தை தனிநபருடைய வீட்டிற்குள் சொந்த பயன்பாட்டிற்கும் வைத்து கொண்டு உள்ளார்கள் தெருவையும் ஓடையும் மறித்து முள்வேலி அமைத்துள்ளனர். ஆக்கிரமிப்பாளர்கள் குறித்து பொதுமக்கள் ஆக்கிரமிப்பு அகற்றும் பொருட்டு மார்ச் மாதம் முதல்வருக்கு மனு அளித்திருந்தனர் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்படி இடத்தை அளவீடு செய்து ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் போடப்பட்டுள்ள அடிபம்பை மீட்டு தருமாறு வட்டாட்சியருக்கு பரிந்துரை செய்துள்ளார் இதுநாள்வரை எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கடந்த மாதம் நடைபெற்ற ஜமாபந்தியில் மனு கொடுக்கப்பட்டுள்ளது ஜமாபந்தி நடத்திய தலைவர் மனுவை பெற்றுக் கொண்டு



கம்பனேரி புதுக்குடி பகுதி 2 கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கடையநல்லூர் வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் கொடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி உடனே சரி செய்ய உத்தரவிட்டார்கள் அதிகாரிகளும் ஆக்கிரமிப்பாளர்களிடம் வந்து பட்டா மற்றும் பத்திரம் கேட்டனர் அவர்களும் எந்தவித ரெக்கார்டும் இல்லை என்று கூறிவிட்டார்கள் மேற்படி இடத்தை அளவு செய்ததில் ஒன்பது செர்ட் இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்தது தற்போது மேற்படி அந்த இடம் கொல்லம் மதுரை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்திருப்பதால் ஒரு சென்டின் விலை சுமார் ஏழு லட்ச ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது இது குறித்து கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக இருக்கும் அதிகாரி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு சாதகமாக பேசி வருகிறார் ஆக்கிரமிப்பாளர் ஒருவருக்கு இரண்டு பட்டாக்கள் இருப் பதாக துணை வட்டாட்சியர் கூறும் பொழுது அதை நிரூபிக்க முடியுமா என்று கேட்டதற்கு அதிகாரிகள் முன்பு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறார் நில அளவையர் வந்து இடத்தை அளந்த பின்பு ஆக்கிரமிப்பு அகற்றுவதாக மூன்று நாள் தவணை கொடுத்தனர் துணை வட்டாட்சியர் நில அளவையரிடம் செல்போன் மூலம் பேசிய போது அனைவரும் கலைந்து சென்று விட்டனர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை..... பொதுமக்கள் முன்னிலையில் கடையநல்லூர் வருவாய் ஆய்வாளர்க்கும் ஆக்கிரமிப்புத் தாரர்களுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது இது குறித்து அப்பகுதி மக்கள் மீண்டும் கையெழுத்திட்டு தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் மக்கள் குறை தீர்ப்பு முகாமில் மனு அளித்துள்ளனர் இந்த முறையாவது பொது மக்களுக்கு நியாயம் கிடைக்குமா ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுமா? துணை வட்டாட்சியரின் செயல் பொதுமக்களை கொதிப் படைய வைத்துள்ளது மிகுந்த கோபத்திற்கு சென்றுள்ளதால் அப்பகுதி மக்கள் ஆக்கிரமிப்பு அகற்றாத பட்சத்தில் தங்களது குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டைகளை அடுத்த திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரில் சென்று ஒப்படைக்க தயாராக உள்ளனர் ஆகவே பொதுமக்களின் முறையான கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் மனது வைத்தால் மட்டுமே முடியும் என்பதால் அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியரை நம்பி உள்ளனர் துணை வட்டாட்சியர் மேற்படி மக்களிடம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்படுவதால் பொதுமக்களிடம் பெரும் பகையை உருவாக்கியுள்ளார் அவரையும் இடம் மாற்றம் செய்ய வேண்டுமென பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் ஒரே பகுதியில் உள்ளவர்கள் தங்களது மக்களிடையே அதிகார துஷ்பிரயோகம் பண்ணி குடிநீர் டேங்கர் சாவி ஒப்படைப்பது அதிலும் பாரபட்சம் காட்டுவது என தொடர்ந்து ஒரே பகுதி மக்களுக்குள் கோபம் குரோதம் வளர்ந்து வருவதால் என்றாவது ஒரு நாள் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிடும் என தெரிய வருவதால் பொதுமக்கள் நலன் கருதி மாவட்ட ஆட்சியர் உடனடியாக இப்ப பிரச்சனைகள் சிறப்பு கவனம் செலுத்தி உயர் நீதிமன்ற உத்தரவுப்படி அரசு நிலத்தை ஆக்கிர மிப்புகள் செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதோடு ஆக்கிரமிப்புகளை மீட்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலத்துக்கு உட்பட்ட 54, 55 ஆகிய வார்டுகளில்

# 1 கோடியே 60 லட்சம் மதிப்பில் புதிய சிமெண்ட் சாலை அமைக்க பணியினை மண்டல குழு தலைவர் காமராஜர் துவக்கி வைத்தார்

பெருங்களத்தூர், ஜூன்.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலத்துக்கு உட்பட்ட சமத்துவ பெரியார் நகரில் 54, 55வது வார்டு பகுதியில் சாலை அமைத்து தர பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் 1 கோடி 60 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து 9 சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளை தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டல குழு தலைவர் காமராஜர் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் புகழேந்தி, பேச்சாளர் கருணாகரன், சமத்துவ பெரியார் நகர் நல சங்க தலைவர் ரஞ்சன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




■ தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காணொளி வாயிலாக சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகரில் ரூ.21.02 கோடி மதிப்பில் பேருந்து நிலையம் விரிவாக்கம், தினசரி காய்கறி மார்க்கெட் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். விவசாய பண்னை அருகே சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வத்ஸ், நகர் மன்ற தலைவர் சுந்தரலிங்கம், துணைத் தலைவர் ரமேஷ், ஆணையாளர் கண்ணன், நகர மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்




# புதுவயல் மேட்டுக்கடையில் தினமும் அவதிப்படும் வாகன ஓட்டிகள்

## போக்குவரத்து நெறிசலை சீர் செய்யாமல் அலட்சியம் செய்யும் போக்குவரத்து காவல்துறை

சிவகங்கை, ஜூன்.12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே புதுவயல் மேட்டுகடை பகுதியில் சாலையின் இருபுறங்களிலும் கனரக வாகனங்கள் அரசுபேருந்துகள் ஒரே நேரத்தில் கடந்த செல்வதால் பள்ளி கல்லூரி அலுவலக பணிக்கு செல்பவர்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்குகின்றனர். போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையில் வாகனங்களைக் கடந்து செல்ல போக்குவரத்து காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.



■ மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சியில் சத்தியமூர்த்தி நகர் சாலை, ஊர்மெச்சிகுளம், பரவை ஆவுளி அம்மன் கோயில் சாலை மற்றும் பரவை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிட ஆகிய பணிகள் பூமி பூஜையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா இ.ஆ.ப உடன் உள்ளார்.

# பெருந்தலைவர் காமராஜர் தொண்டர்கள் இணைந்து நடத்தும் த, வெ,கா தலைவர் விஜயை கண்டித்து சாலிகிராமத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூன்.12-

சென்னை சாலிகிராமத்தில் பெருந்தலைவர் காமராஜர் தொண்டர்கள் இணைந்து நடத்தும் பெரும்தலைவரின் புகழுக்கு தொடர்ந்து களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயல்படும் தமிழக வெற்றி கழகம் நிர்வாகிகளையும் அதை கண்டிக்காத நடிகர் விஜய்யை கண்டித்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 11.06.2025, புதன்கிழமை காலை 10 மணி அளவில் பெருந் தலைவர் காமராஜர் சிலை முன்பு நாடார் சங்கங்களில் கூட்டமைப்பு தலைவர், மின்னல், ஹச். ஸ்டீபன் நாடார் தலைமையில் அகில இந்திய நாடார் மஹாஜன சபை தலைவர், கே. எஸ் .எம். கார்த்திகேயன் நாடார் மற்றும் நாடார் பாதுகாப்பு






பேரவை தலைவர், இ. எம். சீனிவாசன் நாடார் முன்னிலையில் காமராஜர் தொண்டர்கள் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். யார்? இளைய காமராஜர், என்று உரக்க குரலில் போராட்டம் நடத்திய காமராஜர் தொண்டர்கள் ஏராளமான கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# வைகாசி பவுர்ணமியையொட்டி மன்னார்குடியில் உதய கருட சேவை; 12 பெருமாள் சுவாமிகள் ஒரே இடத்தில் சங்கமம்

மன்னார்குடி, ஜூன்.12-

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் ராஜகோபால சுவாமி கோயில் உள்ளது. இது தமிழகத்தின் பிரசித்தி பெற்ற வைணவ தலங்களில் ஒன்றாகும். வைகாசி பவுர்ணமியையொட்டி இந்த கோயிலில் இன்று காலை வைகுண்ட நாதன் திருக்கோலத்தில் பெருமாள் கோபிநாதன் சகிதமாக எழுந்தருளி உதய கருட சேவையில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து கருட வாகனத்தில் பெருமாள் புறப்பட்டு பாமணி ஆற்றங்கரையில் உள்ள கைலாசநாதர் கோயிலுக்கு சென்றார்.

இதேபோல் மன்னார்குடி கோபிநாத சுவாமி கோயில், சேரன்குளம் வெங்கடாஜலபதி கோயில், சேரன்குளம் நவநீத கிருஷ்ணன் சுவாமி கோயில், தேவங்குடி கோதண்டராமர் கோயில், சாத்தனூர் பிரசன்ன வெங்கட்ரமண சுவாமி கோயில், ஏத்தக்குடி ராஜ கோபால சுவாமி கோயில், திருமாக்கோட்டை கஸ்தூரி ரங்கநாதர் கோயில், இருள்நீக்கி லட்சுமி நாராயண சுவாமி கோயில், காளாச்சேரி ஸ்ரீனிவாச பெருமாள் சுவாமி கோயில், பூவனூர் கோதண்டராமர் வரதராஜ சுவாமி கோயில், கஸ்தூரி ரங்கபெருமாள் கோயில் ஆகிய 12 வைணவ கோயில்களில் இருந்து தனித்தனி வாகனங்களில் ஊர்வலமாக பாமணி ஆற்றங்கரைக்கு பெருமாள்கள் வந்தனர்.

பின்னர் வைகுண்ட நாதன் அலங்காரத்தில் உதய கருட சேவையில் பக்தர்களுக்கு ஒரு சேர அருள்பாலித்தனர். மன்னார்குடியில் வைகாசி பவுர்ணமியையொட்டி நடந்த உதய கருடசேவையில் முதல் முறையாக 12 வைணவ கோயில்களில் இருந்து பெருமாள்கள் வந்து ஒரே இடத்தில் சங்கமித்து கருட வாகனங்களில் எழுந்தருளி அருள்பாலித்த விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு தரிசனம் செய்தனர். ஏற்பாடுகளை ராஜகோபாலசாமி கோயில் அறங்காவலர் குழு தலைவர் கருடர் இளவரசன், செயல் அலுவலர் மாதவன், வானமாமலை மடம் சேரங்குளம் சவுரிராஜன் செய்திருந்தனர்.

# வார இறுதி நாட்களை முன்னிட்டு 1,135 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்: அரசு போக்குவரத்துக் கழகம் தகவல்

சென்னை, ஜூன்.12-

வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலும் வெளியான அறிக்கையில்;

13/06/2025 (வெள்ளிக் கிழமை) 14/06/2025 (சனிக்கிழமை) 15/06/2025 (ஞாயிறு) வார விடு முறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்க




ப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம். மதுரை. திருநெல் வேலி. நாகர் கோவில், கன்னியாகுமரி. தூத்துக்குடி, கோயம் புத்தூர், சேலம், ஈரோடு திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 13/06/2025 (வெள்ளிக்கிழமை) அன்று 385 பேருந்துகளும், 14/06/2025(சனிக்கிழமை) 350 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 13/06/2025 வெள்ளிக் கிழமை அன்று 55 பேருந்துகளும் 14/06/2025 சனிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்து இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூர். திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 250 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 13/06/2025 மற்றும் 14/06/2025 அன்று 20 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 6,158 பயணிகளும் சனிக்கிழமை 2,652 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 6,469 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் விo-bile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161